3. கவன ஈர்ப்பு.

முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களிடமிருந்து 1971-72 கோடை விடுமுறையில் பெற்ற இரண்டாம் நிலை முதல் நிலைப் பதவிகளுக்கு உள்ள ஊதிய வித்தியாசத்தை சம்பளத்தில் பிடித்துக்கொள்வது குறித்து.

Thiru K. S. GANAPATHI : Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the objection raised by the Auditors of the Education Department and the orders of the Department directing the officers concerned to recover from the salary of thousands of Grade I Tamil Pandits who were promoted to Grade I post as per the Government orders with effect from 27th February 1971, the difference between the pay of Grade I and Grade II Tamil Pandits drawn by them during the summer vacation of 1971-72 on the plea that they have not completed 8 months of service as Grade I Pandits and the resultant hardship caused to thousands of Tamil Pandits in the State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு கல்வி விதிகள் இணைப்பு 28-ல் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் பற்றி வகுக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அறிவுரை 8-ன் படி பள்ளிக் கல்வி ஆண்டின் கடைசி நாளில் பணியாற்றும், தற்காலிகப் பதவியை வகிக்கும் ஆசிரியர், விடுமுறைக் கால ஊதியம் ஒரு குறிப்பிட்ட விகிதப்படி பெறுவர். பள்ளிக் கல்வி ஆண்டின் கடைசி நாளில் பணிபுரிந்தும், 8 மாதங்களுக்குப் பள்ளியில் பணியாற்றியும் உள்ள ஆசிரியர்கள், விகிதப்படி வழங்கும் (**Proportionate**) விடுமுறைக்கால ஊதியம் பெற உரிமையுடையவர் ஆவர்.

இம்மாநிலத்தில் முதல் நிலைத் தமிழாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்று, போதிய பதவிகள் இல்லாத காரணத்தால் இரண்டாம் நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு பெறும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் அரசாணை (நிலை) எண் 325 கல்வி நாள் 25-2-1971-ல் 2,000 இடைநிலை தமிழாசிரியர் பதவிகள் முதல் நிலைக்கு மாற்றப்பட்டன. 1972-73, 1973-74ஆம் ஆண்டுகளிலும் சில பதவிகள் முதல் நிலைக்கு மாற்றப்பட்டன. இந்த ஆணைகள்படி முதல் நிலைப் பதவி உயர்வு பெற்ற தமிழாசிரியர்களில் எவருக்கு விடுமுறை ஊதியம் அளிக்கப்பட்டதோ அவர்களது பணிக்காலம் முதல்நிலையில் எட்டு மாதங்கள் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு முதல்நிலை ஊதிய விகிதத்தில் சம்பளம் கொடுப்பது தவறு என்றும் அவர்கள் முதல்நிலை அடைந்திரா விட்டால் இரண்டாம் நிலையில் இருந்து இருப்பார்களாதலால் அவர்களுக்கு இரண்டாம் நிலை விகிதப்படி, விடுமுறை ஊதியம் கொடுக்கப்படலாம் என்றும் தணிக்கையில் அறிவுரை வழங்கப்பட்டது. அதற்கேற்ப விடுமுறை ஊதியம் முதல்நிலை ஊதிய விகிதத்தில் அளிக்

கப்பட்டவர்களிடமிருந்து, அதிகப்படியாக அளிக்கப்பட்ட தொகையைத் திரும்பப்பெற ஆணையிடப்பட்டது. முதல் நிலை ஊதியப்படி விடுமுறை ஊதியம் தரவேண்டுமென்ற கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, மாண்புகு அமைச்சர் அவர்கள் விதியில் உள்ளதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இது வெக்கேஷன் டிபார்ட்மெண்டாக இருப்பதனாலே அவர்கள் இதைச் சொல்லுகிறார்கள். எந்த ஒரு இலாகாவிலுமே பதவி உயர்வு பெறும் போது அதற்குப் பிறகு பதவி உயர்வு பெற்ற பதவிக்கு எந்த ஊதியமோ அதைத்தான் பெறுவார்கள். ஆனால் இந்த கல்வி இலாகாவிலே மட்டும் 8 மாதம் 6 மாதம் ஊழியக் காலம் என்று வைத்திருப்பது பொருந்தாது. அரசாங்க ஊழியர்களானால் 6 மாதம். தனியார் பள்ளியில் பணியாற்றுபவர்களானால் எட்டு மாதம். இது எல்லாம் தற்காலிக ஊழியர்களுக்குப் பொருந்தும்படி இருக்கவேண்டுமே தவிர நிரந்தர ஊழியர்களுக்குப் பொருந்துவதாக இருக்கக்கூடாது. அவர்களுடைய பணிக்காலத்தைக் கருதித்தான் அரசு அவர்களுக்கு முதல் நிலை வழங்குகின்றது. அதன்பிறகும் அவர்களுக்கு அந்த $1\frac{1}{2}$ மாத காலத்திற்கு ஊதியம் வழங்காமல் இருப்பது தவறு. எனவே இதை மறு பரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் விளக்கமாக எடுத்துச் சொல்லியபடி, இப்பொழுது இருக்கிற விதிமுறைகளின்படி தணிக்கையாளர்கள் அந்த முடிவுக்கு வருகிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாடு நமக்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலே அந்தக் கோரிக்கையை நாம் தனியாக ஆராய்ந்து, அதற்கு என்று தனியாக ஆணைகள் பிறப்பித்தால்தான், அந்த இடர்ப்பாட்டிலிருந்து, அதாவது தணிக்கையாளருடைய விதிமுறைகளிலிருந்து, நாம் மீள முடியும். அப்படி மீளுவதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றித்தான் இப்பொழுது நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது உள்ள விதிமுறைப்படி தணிக்கையாளர்களின் குறிப்பை மீறி நாம் நடக்க முடியாது. அதற்காகத்தான் அந்த நடவடிக்கை. ஆகவே அப்படி இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அவர்கள் பதவி உயர்வு பெற்று, தொடர்ந்து அவர்கள் பதவி வகிக்கப் போகிறவர்கள் அல்லது அவர்கள் நிரந்தரமாக இரண்டாம் நிலையில் இருந்திருப்பார்கள். முதல் நிலைக்கும் வந்திருப்பார்கள், அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கையான இது தனியாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே இதை தனியாக ஆராய்ந்து, அரசு ஒரு ஆணை இடுமானால், அப்பொழுது தணிக்கையாளர்களும் அதை ஏற்றுக் கொள்ளுவார்கள். அது இல்லாதவரை இருக்கிற விதியின்படிதான் செய்ய வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆகவே தான் தனியாக இது ஆராயப்பட்டு வருகிறது என்று நான் குறிப்பிட்டேன். விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், இதை ஆராய்ந்து முடிவெடுக்கும் காலம் வரையிலே, இந்தத் தணிக்கையாளருடைய அறிவுரை நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாக ஆராய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சரவர்கள் விதியில் இருக்கிறதைத்தான் சொல்ல முடியுமே தவிர, மதியில் இருக்கிறதையா சொல்ல முடியும்?

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, விதியில் உள்ளதுபடி நடந்து விட்டால், நாம் மதியில் உள்ளதைப்பற்றிக் கேட்க வேண்டிய அவசியமே இருக்காது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மதியிலிருந்துதான் விதி வருகிறது. விதி வந்த பிற்பாடு மதிக்கு வேலையிராது, சில நேரம்.

4. அரசின் தீர்மானம்

உணவுக் கொள்கை பற்றிய கொள்கைக் குறிப்பு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள உணவுக் கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று @முன்மொழிகின்றேன்.

திரு என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே.....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நிறைய பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, இந்த உணவுக் கொள்கை மீது இன்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். இந்த மாநிலம் சென்ற ஆண்டு உணவு உற்பத்தியிலே நல்லதொரு தன்னிறைவு பெற்று உபரியாக உணவுப் பொருட்களை உற்பத்தி செய்திருந்தது. இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டு இப்பொழுது அதிகமான நெருக்கடியில் நம்முடைய நாட்டு மக்கள் இருக்கின்றார்கள். இதில் ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது. சென்ற ஆண்டு 73 இலட்சம் டன்னுக்கு மேல் அரிசியும், நெல்லும், நவதானியங்களும் உற்பத்தி செய்தபோது, இந்த ஆண்டு பருவ மழை தவறி அசந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் என்ன செய்வது என்ற கருத்தோடு, ஓரளவு உபரி தானியங்களை வெளி மாநிலங்களுக்குக் கொடுக்காமல் இருந்திருந்தால், நம்முடைய தற்போ

@231-285ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.